கைத்தறி நெசவாளர்களின்

வாழ்வாதாரத்தை வளப்படுத்திட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் - கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, ஆக.6- கைத்தறி நெசவாளர்களின், குறிப்பாக மகளிர் நெசவாளரின், வாழ்வாதார வாய்ப்புக்களை வளப்படுத்திட, ஃபேஷன் டிசைனிங் தொடர்பான திறன் வளர்ச்சி மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு சம்பந்தப்பட்டப் பயிற்சித் திடங்களை அரசு மேற்கொண்டுள்ளதா ? அப்படியானால் கடந்த மூன்றாண்டுகளில் பயனடைந்த கைத்தறி நெசவாளர்களின் எண்ணிக்கை எத்தனை? இத்தகைய திட்டங்களுக்காக அரசால் செய்யப்பட்ட செலவுத்தொகை எவ்வளவு? என, கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் முன்னேற்றம் குறித்த கேள்வியை நாடாளுமன்றத்தில் தி.மு.க. மக்களவைக் குழுவின் தலைவர் டி.ஆர்.பாலு எழுப்பினார்.

அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி அளித்த பதில் வருமாறு:

"இந்தியாவின் முக்கியமான அமைப்புசாராப் பொருளாதார செயல்பாடுகளில் கைத்தறித் துறையும் ஒன்றாகும். ஊரகப் பகுதிகளில் வாழும் 35 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கைத்தறிநெசவுத் தொழிலைத் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளார்கள். இவர்களில் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் மகளிர் உள்ளனர். இவர்கள் நெசவு நெய்வது மட்டுமின்றி அதுசார்ந்த அனைத்துத் துணைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, கைத்தறி துறை மகளிரை பொருளாதார ரீதியாக அதிகாரப்படுத்துவதில் முக்கிய மூலாதாரமாக விளங்குகிறது. இதன் பொருட்டு ஃபேஷன் டிசைனிங்க் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் கைத்தறி நெசவாளர் தம் தொழில் முனைவு மற்றும் செயல் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு திட்டங்களை இந்திய அரசு அமல்படுத்தி வருகிறது.

இந்த முயற்சிகள் அனைத்திலும் மகளிர் பங்கேற்பு தீவிரமாக வலியுறுத்தப் படுகிறது.

ஜவுளித்துறை மற்றும் திறன் வளர்ச்சி அமைச்சகங்களின் பல்வேறு திட்டங்கள்.

'ஒன்றிய அரசின் தொழில்முனைவு மற்றும் திறன் வளர்ச்சி (மினிஸ்ட்ரி ஆஃபஸ்கில் டெவலப்மென்ட் அண்ட் என்டர்பிரணர்ஷிப்) அமைச்சகம் , ஸ்கில் இந்தியா மிஷன் என்ற திட்டத்தை பரவலாக அமைந்துள்ள திறன் வளர்ச்சி மையங்கள் வாயிலாக, தொழிலாளர்களின் திறன் சீரமைப்பு மேம்பாடு, முன்னேற்றம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது. அதுபோல, ஜவுளி அமைச்சகமும் ஸ்மார்த் (SMARTH) என்ற திட்டத்தை கடந்த மூன்று ஆண்டுகளாக செயல்படுத்தி வந்துள்ளது. இந்தத் திட்டங்கள் மூலமாக கைவினைக் கலைஞர்கள், கைத்தறித் தொழிலாளர்கள் திறன்மேம்பாட்டு பயிற்சி பெற்றுப் பயன் அடைகின்றனர்.

மேலும், ஜவுளி அமைச்சகத்தின்தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டம், தேவைக்கு ஏற்ப, கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் உள்ளிட்ட நிதி உதவிகள், கருவிகள், உபகரணங்கள் போன்ற இன்றியமையாத வசதிகளைப் பெற்றிட வழிவகை செய்வதுடன், ஃபேஷன் வடிவமைப்பு அல்லாமல் உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்துதல் தொடர்பான உதவிகளையும் அளித்து துணை நிற்கிறது. இது, ஜவுளித் துறையின் ஃபிளேக் ஷிப் FLAGSHIP PROGRAM என்று சொல்லத்தக்கமுதன்மையான முக்கியத்துவம் கொண்ட திட்டம் ஆகும். அத்துடன், தேசிய ஃபேஷன் தொழில் நுட்ப நிறுவனமும் (National Institute of Fashion Technology) கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகமும் கரம் கோர்த்து பேஷன்வடிவமைப்புக் கல்விபயிலும் மாணவர்கள் துணையுடன், நெசவாளர்கள் தங்களுடைய பாரம்பரியத்தொழில் திறனுடன் நவீன

வடிவமைப்பு தொழில் நுட்பத்தையும் ஒருங்கிணைத்து, மேம்பாடு அடைந்திடும் வண்ணம் பயிற்சிகள் வழங்குகிறது.

இப்படியான, பல்வேறு திட்டங்கள் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில், அதாவது, 2024 ல் ரூ.1374 கோடி, 2025 ல். ரூ.2524 கோடி , 2026 ல் ரூ.1246 கோடி என மொத்தம் ரூ5144 கோடிகளை பல்வேறு திட்டங்களில் ஒன்றிய அரசு செலவு செய்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ஜூன் திங்களுடன் முடிவடைந்த காலாண்டு காலத்தில் செலவிடப்பட்ட தொகை ரூ.374.51 கோடி.

தமிழ்நாட்டில் பயனாளிகள் 4955 மட்டுமே.

ஒன்றிய அரசின் இத்திட்டங்களால், கடந்த மூன்று ஆண்டுகளில் நாடு முழுக்க பயன் அடைந்த கைத்தறி நெசவாளர் களின் மொத்த எண்ணிக்கை 1,64, 644 ஆகும். அதில், 1,00,750 மகளிர் அடங்குவர். ஆனால், தமிழ்நாட்டில் பயன்பெற்றோர் எண்ணிக்கை 8412 என மிகக் குறைவாகும். இதில் மகளிர் பயனாளிகள் எண்ணிக்கை 4995 மட்டுமே. "

அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி அவர்கள் மக்களவையில் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். இருப்பினும் திரு.டி.ஆர்.பாலு அவர்கள் எழுப்பிய வினாவின் மையக் கருத்தான " ஃபேஷன் டிசைனிங் "கில் தொழில்நுட்ப திறன் வளர்ச்சிக்கு, அதிலும் குறிப்பாக மகளிர் திறன் மேம்பாடு குறித்த அரசின் சிறப்பு முன்னெடுப்புகள், அதன்பொருட்டு செயல்பாட்டில் உள்ள திட்டங்கள், அவற்றின் மீது செய்யப்பட்ட செலவு, பயன்பெற்ற பெண் நெசவாளர்கள் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் தொடர்பானவை ஆகும். ஆனால், இந்தக் கேள்விகளுக்கு அரசின் பதிலில் உரிய விவரங்கள் துல்லியமாக தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காவிரிப் படுகையில் காவிய மழை!

அந்த மழைத் துளிகள் கழகத்தின் இளந்தலைவருக்கு வானம் தூவிய வாழ்த்துப் பூக்கள்.

அவருக்கு சற்றும் தொடர்பில்லாத ஒரு வார்த்தையைப் பிடித்துத் தொங்கி வழக்குப் போட்ட த.வெ.க அரசின் மீதும் வக்காலத்து வாங்கிய ஊடகநடுநிலை (அ) யோக்கியர்களின் மீதும் இயற்கைத் துப்பிய எச்சில்.

திராவிட இயக்கத்தின் மீது திட்டமிட்டு பூசப்படும் களங்கச் சேற்றை மீண்டும் ஒரு முறை சட்டப்பூர்வமாகக் கழுவக் கூடிய வாய்ப்பைத் தந்திருக்கிறது அந்த மழை.

கலைஞரின் அரசியல் களமான தஞ்சை மண்ணில் தன்னை இயக்கத்தின் நம்பிக்கைக்குரிய தலைவர் என மெய்ப்பித்திருக்கிறார் இளம் தலைவர். அவரை உச்சிமோந்து பாராட்டியிருக்கிறது அந்த மழை.

ஆட்சியில் இல்லாவிட்டாலும், ஆட்சியில் இருந்தபோது எந்தப் பலனும் கிடைக்காமல் போனாலும் அது பற்றியெல்லாம் துளியும் கவலையின்றி, தங்கள் உடம்பில் ஓடுவது கருப்புசிவப்பு ரத்தம் என்பதை தமிழ்நாடு முழுவதும் உணர்வுப்பூர்வமாகக் காட்டிய தி.மு.க. உடன்பிறப்புகள் முதன்மையான நன்றிக்குரியவர்கள். அவர்கள் அனைவருக்கும் இயற்கையின் முத்த மழை.

அடுத்த நன்றி, தி.மு.க.வின் கெத்தை மிகக் குறுகிய காலத்திற்குள் வெளிப்படுத்தும் வாய்ப்புக்கு காரணமான விஜய் அரசுக்கு! அதன் ஆணவத்தை வழித்துத் துடைத்து காவிரியில் சேர்க்கட்டும் அந்த மழை!

கோவி.லெனின்
கழக ஆலோசகர்,
தகவல் தொழில்நுட்ப அணி

மழைநீர் சேகரிப்பு, நிலத்தடிநீர் நீர் நிரப்புதல் போன்ற

இயற்கை வளங்களின் மேலாண்மைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மக்களவையில் - எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.6- திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், மக்களவையில், நாட்டின் தற்போதைய சாகுபடி முறைகள் மற்றும் நீர்வள நிலைமைகளுக்கு இடையிலான பொருந்தாமை, குறிப்பாக நீர்ப் பற்றாக்குறை, வறட்சி மற்றும் நிலத்தடி நீர் குறைந்து வரும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், உள்ளூர் நீர் கிடைப்புத் தன்மை மற்றும் வேளாண்பருவநிலை பொருத்தத்தின் அடிப்படையில் பயிர் பல்வகைப்படுத்தலை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள், நுண்பாசனம், மண் வள மேலாண்மை, இயற்கை வளங்களின் திறமையான பயன்பாடு மற்றும் நீண்டகால நீர்ப் பாதுகாப்புடன் கூடிய நிலையான வேளாண்மையை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை இணை அமைச்சர் பகீரத் சவுத்ரி அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் சாகுபடி முறைகள் மற்றும் நீர்வள நிலைமைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின் தரவுகள் மற்றும் மாதாந்திர அடிப்படையிலான கிரேஸ் செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், குறிப்பாக பஞ்சாப், ஹரியானா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய நிலத்தடி நீர் குறைந்த மாநிலங்களில், தற்போதைய சாகுபடி முறைகளின் நீர்த் தேவைக்கும் கிடைக்கக்கூடிய நீர்வளத்திற்கும் இடையே பொருந்தாமை இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பயிர்த்திட்டங்கள்!

மேலும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் 'இந்தியாவின் சாகுபடி முறை அட்லஸ்' தயாரித்துள்ளதாகவும், நிலவும் வேளாண் பருவநிலை சூழல், நீர் உள்ளிட்ட வளங்களின் கிடைப்புத் தன்மை மற்றும் சந்தை வாய்ப்புகளை கருத்தில் கொண்டு, தானிய ஆதிக்கம் கொண்ட சாகுபடி முறைகளுக்கு மாற்றாக நிலையான மாற்றுச் சாகுபடி முறைகளை அடையாளம் கண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், நெல், கோதுமை, மக்காச்சோளம், கம்பு, சோளம், துவரை, கொண்டைக்கடலை, சோயாபீன், கடுகு, நிலக்கடலை, பருத்தி, கரும்பு, உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் ஆகிய 14 முக்கியப் பயிர்களுக்கு, ஒப்பீட்டு பரவல் குறியீடு, ஒப்பீட்டு விளைச்சல் குறியீடு, நிலையான விளைச்சல் குறியீடு மற்றும் மண்பருவநிலை பொருத்தக் குறியீடு ஆகியவற்றின் அடிப்படையில் வேளாண்சூழலியல் மற்றும் மாவட்ட வாரியான பயிர்த் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவில் அதிக நீர் தேவைப்படும் முக்கியப் பயிர்களாக நெல், கரும்பு, பருத்தி மற்றும் சணல் உள்ளதாகவும், இவை மொத்தமாக 6.27 கோடி ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, நாட்டின் மொத்த பயிரிடப்பட்ட பரப்பளவில் சுமார் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், மழைப்பொழிவு மற்றும் நீர் கிடைப்புத் தன்மையுடன் தொடர்புபடுத்தி மேற்கொண்ட மதிப்பீட்டில், ஆண்டுக்கு 650 மில்லிமீட்டருக்கும் குறைவான மழைப்பொழிவு பெறும் 68 மாவட்டங்களில் சுமார் 28.9 லட்சம் ஹெக்டேர் நெல் பயிரிடப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இது நாட்டின் மொத்த நெல் சாகுபடி பரப்பளவான 5.10 கோடி ஹெக்டேரில் சுமார் 5.67 சதவீதம் ஆகும். அதேபோல், ஆண்டுக்கு 700 மில்லி மீட்டருக்கும் குறைவான மழைப்பொழிவு பெறும் 91 மாவட்டங்களில் சுமார் 7.21 லட்சம் ஹெக்டேர் கரும்பு பயிரிடப்படுவதாகவும், இது நாட்டின் மொத்த கரும்பு சாகுபடி பரப்பளவான 67 லட்சம் ஹெக்டேரில் சுமார் 10.76 சதவீதம் ஆகும் என்றும் தெரிவித்தார்.

உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை!

இந்த மதிப்பீடுகள், நீர்ப் பற்றாக்குறை மற்றும் தொடர்ந்து குறைந்து வரும் நிலத்தடி நீர் மட்டம் உள்ள பகுதிகளில், நீர் பாதுகாப்பு, விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் வேளாண் உற்பத்தித்திறனை சமநிலைப்படுத்தும் வகையில், அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற பயிர் பல்வகைப்படுத்தலை ஊக்குவிப்பதற்கான அறிவியல் அடிப்படையாக அமைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

உள்ளூர் நீர் கிடைப்புத் தன்மை, மண்ணின் தன்மை, வேளாண்பருவநிலை பொருத்தம் மற்றும் இயற்கை வளங்களின் நிலையான பயன்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அதிக நீர் தேவைப்படும் பயிர்களிலிருந்து பருப்பு வகைகள், எண்ணெய் வித்துப் பயிர்கள், சிறுதானியங்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் போன்ற குறைந்த நீர் தேவைப்படும் பயிர்களுக்கு பயிர் பல்வகைப்படுத்தலை ஒன்றிய அரசு ஊக்குவித்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

பயிர் பல்வகைப்படுத்தலுக்கான முன்னோடித் திட்டத்தின் கீழ், மேற்கண்ட அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட 47 மாவட்டங்களில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற பயிர் பல்வகைப்படுத்தல் நடவடிக்கைகளை செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். மேலும், பல்வகைச் சாகுபடி முறைகளை ஊக்குவிக்கும் வகையில், பல்வேறு பயிர்களுக்கு ஏற்ற உகந்த பாசன அட்டவணை மற்றும் சொட்டு நீர்ப்பாசன உரப்பாசன முறை ஆகியவை தரநிலைப்படுத்தப்பட்டு, நீர் பயன்பாட்டுத் திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக ஊக்குவிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மேலும், 2023-24 முதல் 2025-26 வரை, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் 457 பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளதாகவும், இதன் மூலம் 8,749 விவசாயிகள் மற்றும் 4,592 வேளாண் விரிவாக்கப் பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இப்பயிற்சிகள் அறிவியல் அடிப்படையிலான பயிர் பல்வகைப்படுத்தல் மற்றும் நிலையான பயிர் மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்டதாகவும் கூறினார்.

ஊட்டச்சத்து மேலாண்மை நடவடிக்கை!

நிலையான வேளாண்மை, நுண்பாசனம், மண் வள மேலாண்மை மற்றும் இயற்கை வளங்களின் திறமையான பயன்பாட்டை மேம்படுத்த ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அமைச்சர் தெரிவித்தார். பிரதம மந்திரி தன்தான்யா கிரிஷி யோஜனா திட்டத்தின் கீழ், 100 இலட்சிய வேளாண் மாவட்டங்களில், பயிர் பல்வகைப்படுத்தல், பாசன மேம்பாடு, அறுவடைக்குப் பிந்தைய கட்டமைப்பு வசதிகள், இயற்கை மற்றும் உயிரியல் வேளாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை போன்ற நடவடிக்கைகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நீண்டகால நீர்ப் பாதுகாப்பு மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மேற்கொள்ளும் ஆராய்ச்சி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் களநிலை செயல் விளக்கங்கள் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கைகளில் மழைநீர் சேகரிப்பு, பண்ணைக் குட்டைகள் மற்றும் பிற மேற்பரப்பு நீர் சேமிப்பு அமைப்புகள் உருவாக்குதல், நிலத்தடி நீர் நிரப்புதல், மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரை ஒருங்கிணைத்து பயன்படுத்துதல், சேமிக்கப்பட்ட நீரை பல்வேறு பயன்பாடுகளுக்குப் பயன்படுத்துதல், வயலிலேயே ஈரப்பதத்தைப் பாதுகாத்தல், பாதுகாப்பு வேளாண்மை, பாதுகாப்புப் பாசனம், நுண் பாசனம் மற்றும் செயற்கை நுண்ணறிவு, உணரிகள் மற்றும் வானிலைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட பாசன அட்டவணை மற்றும் ஆலோசனை அமைப்புகள் ஆகியவை இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளுக்கு தேசிய நிலையான வேளாண்மை இயக்கம், பிரதம மந்திரி கிரிஷி சிஞ்சாயீ யோஜனா - ஒரு துளி நீர் அதிக விளைச்சல், பிரதம மந்திரி கிரிஷி சிஞ்சாயீ யோஜனா - நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டுக் கூறு 2.0 மற்றும் பிரதம மந்திரி தன்தான்யா கிரிஷி யோஜனா ஆகிய திட்டங்கள் ஆதரவாக உள்ளதாகவும், இவை பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தி, சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வேளாண் நடைமுறைகளை ஊக்குவித்து வருவதாகவும் ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை இணை அமைச்சர் பகீரத் சவுத்ரி அவர்கள், திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

திண்டுக்கல் கலைஞர் மாளிகையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

மாவட்டக் கழகச் செயலாளர்கள் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் வேண்டுகோள்!

திண்டுக்கல், ஆக.6- திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு, அரசியல் களம், சட்டமன்ற ஜனநாயகம் ஆகிய அனைத்திலும் மகத்தான சாதனைகள் படைத்து பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு மக்கள் நினைவில் என்றும் நிலைகொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் 5 முறை முதலமைச்சராகவும்

இருந்தவர். அவரது வழியில் தந்தை பெரியார் அவர்களுடைய சமூக நீதி கொள்கைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவம் கொடுத்தவரும், நமது கழக ஆட்சியில் தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றியவருமான கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 07.08.2026, வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில், திண்டுக்கல், கலைஞர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை, வார்டு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சிமன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் முத்தமிழின் முகவரியாக, புகழ்ச் சின்னமாக ஒளிவீசும் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளினையொட்டி 07.08.2026, வெள்ளிக்கிழமை அன்று திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்கள், வார்டு மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி. ஐ.பி. செந்தில்குமார் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வேலூர் தெற்கு மாவட்டம் முழுவதும்!

முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

வேலூர், ஆக. 6- வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் நடந்தது. நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தீர்மானங்கள் குறித்து சிறப்புரை ஆற்றினார். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் நினைவு நாளான வருகிற 7ந்தேதி அவரது உருவப்படத்திற்கு நிர்வாகிகள் அனைவரும் புகழஞ்சலி செலுத்த வேண்டும்.நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசை கண்டித்து வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது தமிழகத்தில் டெல்டா பகுதிகளில் பருவ மழை இல்லாததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் தமிழகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நீரின் பங்கை வழங்காமலும் தமிழக விவசாயிகளின் எதிர்கால வாழ்வாதாரத்தை முடக்கும் மேகதாது அணை கட்டுமான பணியை கைவிடாமலும் ஆணவ போக்குடன் நடந்து கொள்ளும் கர்நாடக அரசை கண்டித்தும் அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் ஒன்றியபாஜக அரசின் மெத்தன போக்கை கண்டித்தும் காவிரி நீர் ஒழுங்காற்று ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி தமிழகத்திற்கு உரிய நீர் பங்கீட்டைப் பெற திராணியில்லாத தமிழக அரசை கண்டிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டன. நிகழ்ச்சி மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் குடியாத்தம் முன்னாள் எம்எல்ஏ அமுலுவிஜயன் மற்றும் மாவட்ட மாநகர ஒன்றிய நகர திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.